# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.446/2014 RCOP.No.

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R.இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 08-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா. 1 08.02.2023

பெயர் - ஜெயராமன் தந்தை/கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

3. எனது மகள் தாவா சொத்தின் எதிரில் உள்ள எஸ்.பி.ஒ.எ. பள்ளியில் படித்துக் கொண்டு இருந்தாள். நான் தற்போது சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். அதை பரமகுருச்சி திருச்செந்தூரில் நடத்தி வருகிறேன். பொதுவாக கடன் செலுத்த காலதாமதமானால் அதற்கு வட்டி அதிகமாகும். தாவா சொத்தில் கடன் இருப்பது அறிந்து தான் கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம். பிரதிவாதியுடன் ஒப்புக்கொண்ட கிரையத் தொகையை வைத்துதான் அவர் வங்கிக்கடனை அடைப்பதாக நாங்கள் ஒத்துக்கொண்டோம் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் வங்கிக்கடனுக்கான நிலுவைத்தொகையை அறிந்து தான் ஒப்பந்தம் போட்டோம். பிரதிவாதி தனது வீட்டுகடனை கட்டமுடியாத காரணத்தினால் தான் தாவா சொத்தை விற்க முன்வந்தார்.

4. கிரையத்தொகை ரூ.34.00.000-- என்று ஒப்புக்கொண்டோம். அதில் சுமார் ரூ.7.00.000-- யை முன்பணமாக கொடுத்தேன், பின்னர் கடன் பொருட்டு பிரதிவாதியின் வங்கியில் ரூ.2.16.000-- த்தை செலுத்தினேன். மேற்படி முன்பணம் ரூ.7.00.000-- யில் ரூ.3.50.000-- ஒத்திக்காக கொடுத்த பணமும் மீதம் உள்ளது ஒப்பந்தத்தின் போது கொடுத்தேன். ஒப்புக்கொண்ட கிரையத்தொகையை முழுமையாக கொடுக்காமல் எந்த காரணத்திற்காக

இ.எம்.ஐ மட்டும் கட்டினேன் என்றால் வங்கியில் இருந்து கடன் செலுத்ததற்காக வீட்டிற்கு வருவார்கள் ஆகவே பிரதிவாதியுடன் பேசி அவர் கூறியதின்படி இ.எம்.ஐ தொகையை மட்டும் கட்டினேன். வங்கியின் நிலுவைத்தொகை இன்னது என்று என்னிடம் வங்கி பணியாளர்கள் கேட்டார்கள் என்றால் அதன் ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. கிரையத்தொகை மீதத்தை கட்ட தயாராக இருப்பதாக பிரதிவாதியிடம் தெரிவித்துள்ளேன்.

5. கிரைய ஒப்பந்தமானது 23.03.2014 ஏற்படுத்தப்பட்டது. மேற்படி கிரைய ஒப்பந்தப்படி முழு கிரையத்தொகையையும் மூன்று மாதத்துக்குள் செலுத்தவேண்டும். அதன்படி 22.06.2014 க்குள் கிரையத்தொயை நான் செலுத்தி இருக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். மேற்படி காலத்திற்குள் கிரையத்தொகையை கொடுக்க தயாராக இருப்பதாக பிரதிவாதிக்கு எழுத்து மூலமாக எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை. 28.06.2014 அன்று தான் எனக்கு வங்கிக்கடன் வழங்கப்பட்டது. சொத்துவரி சம்மந்தமான அட்டை என்னிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது வரை என்னிடம் இருக்கிறது. நான் கிரையத்தொகையை கொடுக்காததால் தான் வீட்டுவரி மற்றும் வங்கிக்கடனை பிரதிவாதியால் செலுத்த முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. பிரதிவாதிகள் பலமுறை கேட்டும் நான் கிரையத்தொகையை கொடுக்காததால் தான் கிரைய ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி இ.எம்.ஐ செலுத்த கூறியதற்கான ஆவணம் எதுவும் கிடையாது அவர் வாய்மொழியாகத்தான் கூறினார். நான் பிரதிவாதி கூறாமலேயே வேண்டும் என்றே வங்கியில் இ.எம்.ஐ செலுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. வங்கி கடன் 2014 ல் சுமார் ரூ.26.00.000-- நிலுவையில் இருந்தது. கிரையத்தொகையை முழுவதுமாக செலுத்த நான் வங்கியில் கடனுக்கு முயற்சி செய்தேன் அதற்கு பிரதிவாதி ஒத்துழைக்கவில்லை. என்னிடம் பணம் இல்லாததால் தான் கிரையத் தொகையை முழுவதுமாக கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வங்கியில் செலுத்திய பணம் மற்றும் சொத்துவரி பணம் சம்மந்தமான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

7. வா.சா.ஆ.8 ஆவணம் என்னால் பிரதிவாதிக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகார் மனுவின் சி.எஸ்.ஆர் ஆகும். அதன் புகார் நகல் தாக்கல் செய்யப்படவில்லை. புகார் மனு மீது மேற்படி

நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மேற்படி புகார் பொய் என்பதால் தான் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பை தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக அதைப்பற்றி அனுப்பினேன். வா.சா.ஆ.9 அறிவிப்பானது கிரைய ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட மூன்று மாதத்திற்குள் அனுப்பப்படவில்லை என்று சொன்னால் நெருக்கத்தில் அனுப்பப்பட்டது. வா.சா.ஆ.9 அறிவிப்பு பிரதிவாதியால் பெறப்பட்டது சம்மந்தமான ஒப்புகை அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக கேட்டார் என்ற ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை வாய்மொழியாகத்தான் கேட்டார்.

8. பிரமாணவாக்குமூலத்தில் நான் கூறியதுபோல பிரதிவாதியின் கணவர் 25.08.2014 அன்று கொடுத்த முன்பணத்தை வட்டியோடு திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டார். கிரைய ஒப்பந்தம் சம்மந்தாக இந்த வழக்கை தவிர வேறு வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதி 29.12.2020 அன்று எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்னால் பெறப்படவில்லை. இவ்வழக்கு சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் குறுக்கு விசாரணையின் போது கூறிய பரிகாரமும் வழக்கின் பரிகாரமும் ஒன்று அல்ல என்று சொன்னால் சரியல்ல ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.)